டெங்குக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தற்போது தலைநகர் டெல்லியையே மிரட்டும் டெங்கு, மருத்துவத் தலைநகரான தமிழ்நாட்டை நெருங்கவே அச்சப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், நோயற்ற மாநிலமாகத் தமிழகத்தை இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, அந்தவகையிலே இவ்வளவு சிறப்புமிக்கது இந்தச் சித்த மருத்துவம். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கிற சித்த மருத்துவர்களாலே ஒரே நேரத்திலே பாராட்டப்பட்டிருக்கின்ற அறிவிப்பான 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற அற்புதமான பொக்கிஷத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இத்தனை நடவடிக்கைகளும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் என்று கருதுகின்றேன். வருங்காலத்திலே அதுகுறித்து அரசு யோசிக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகம் ஒன்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குத்தான் எல்லோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அனுப்பி, பதில் வாங்கி, பின்னர் எடுத்துக்கொள்வது

2015 செப்டம்பர் 18] [பேரவைத் தலைவர்]

குறித்து ஆய்வு செய்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதிலே point என்னவென்றால், நீங்கள் இப்பொழுது சொன்னதுதான். துறைக்கு இன்னும் அனுப்பவில்லை. (குறுக்கீடு) 10-00 மணிக்குத்தான் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள், சொல்வதைக் கேளுங்கள், போக்குவரத்துக் கழகம் பற்றி என்று சொன்னீர்கள், காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள், அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்றுதான் நான் ஒப்புக்கொள்கிறேனே? (குறுக்கீடு) 10-27 மணிக்குத்தான் உங்கள் உறுப்பினர் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருப்பதை நான்தான் ஒப்புக்கொள்கிறேனே? (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேனே? (குறுக்கீடு) பிறகு என்ன இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு) பேரவைத் தலைவருடைய பரிசீலனையில் இருப்பதை நீங்கள் திரும்ப எழுப்பினால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 10-10, 10-27 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.

*திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 32-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைக்குக்கூட உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்த கவன ஈர்ப்பை நான் எடுத்திருக்கிறேன். பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) பதில் வர, வரத்தான் எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) நேற்றுகூட உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததைத்தான் எடுத்துக்கொண்டேன். (குறுக்கீடுகள்) நேற்றுகூட உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததை எடுத்துக்கொண்டேன். வரிசையாக எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) பதில் வர, வர நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்படி பேரவைத் தலைவரை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்)

தினம் ஒரு கவன ஈர்ப்பை அவையில் நான் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். எடுக்காமல் இல்லை. (குறுக்கீடுகள்) தினம் ஒரு கவன ஈர்ப்பை நான் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் கொடுத்திருப்பதை வற்புறுத்தி, எடுத்துதான் ஆகவேண்டுமென்று நீங்கள் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதையெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இன்றுதானே அறிவிப்பைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அறிவிப்புக் கொடுத்ததை, நான் பதில் வாங்கித்தான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11-05

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து, நீங்கள் இப்பொழுதுதான் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: அதுபோக, நான் சில விஷயங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அறிவிப்புக் கொடுத்து 10 நாட்கள் ஆனபின்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை தொடங்கிய பிறகு, 10-10, 10-20 மணிக்குத்தான் நிறைய உறுப்பினர்கள் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பி, பதில் வாங்கித்தான் அவையில் நான் எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்குக்கூட உங்களுடைய கட்சி உறுப்பினர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்பைத்தான் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். வரிசையாக தினமும் ஒரு கவன ஈர்ப்பை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். எடுக்காமல் இல்லை. எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன். பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவரை

2015 செப்டம்பர் 18] [பேரவைத் தலைவர்]

அவ்வாறெல்லாம் வற்புறுத்தமுடியாது. கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் விதி இருக்கிறது. பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. தினமும் இரண்டு, மூன்று கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. பதில் வர, வர, நேரத்தையும், காலத்தையும் அனுசரித்து தேவையான அளவிற்கு நான் எடுத்துக்கொள்வேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அப்படியெல்லாம் வற்புறுத்திக் கேட்க முடியாது. பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவ்வாறெல்லாம் நீங்கள் பேரவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. பதில் வர, வர நான் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவரை நீங்கள் அவ்வாறெல்லாம் வற்புறுத்த முடியாது. நீங்கள் சொல்வது முறையில்லை. (குறுக்கீடு) நீங்கள் அவ்வாறெல்லாம் சொல்ல முடியாது. செல்வி கே. பாலபாரதி நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அவ்வாறெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. உட்காருங்கள், செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொல்வது எதுவும் அவைக் குறிப்பில் வராது. நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: அரசுப் பேருந்துகளில் குறிப்பாக நெல்லை மண்டலத்திற்குட்பட்ட பேருந்தில் தமிழ்நாட்டிலிருந்து கேரளாவில் உள்ள கொட்டாரக்கரா செல்லும் பேருந்திலிருந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்த அறிவிப்பை நீங்கள் கொடுக்கவேயில்லை. (குறுக்கீடு) நீங்கள் கொடுக்கவேயில்லை. கொடுக்காத அறிவிப்புக் குறித்துக் கேட்டால் எப்படி.? (குறுக்கீடு)

திருமதி விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்திருக்கிறாரா? சரி, நீங்கள் 10-02 மணிக்கு உங்களுடைய அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். 10-02 மணிக்கு அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, என்ன செய்வது? அது என்னுடைய கவனத்திற்கே இன்னும் வரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த அறிவிப்பு என்னுடைய கவனத்திற்கே வராதபோது, நான் என்ன செய்ய முடியும்? உட்காருங்கள். திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: 90-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அரசு விதைப் பண்ணைகள், எண்ணெய் வித்துப் பண்ணைகளில் கடந்த ஆறு மாதங்களாக வெள்ளாளவிடுதி, குடுமியான்மலை, வம்பன் ஆகிய பண்ணைகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேசாதீர்கள். என்னிடத்தில் என்ன கேட்க வேண்டுமோ, அந்தக் கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. உலகநாதன்: சம்பளம் இதுவரை வழங்கவில்லை. ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். நான் அதுகுறித்துப் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி கோட்டத்திற்குட்பட்ட, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து குறித்தும், கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புகள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக. . .

2015 செப்டம்பர் 18] [திரு. அ. கணேஷ்குமார்]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ்.. விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருப்பவற்றை நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். பதில் வர, வர நான்தான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? அவ்வாறெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது.

3. கவன ஈர்ப்பு

தருமபுரி மாவட்டம், அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தருமபுரி மாவட்டம், அரூர்-ஊத்தங்கரை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் 1983 முதல் 2003 வரை மாலிப்டினம் கனிம இருப்பு குறித்து இந்திய புவியியல் துறை மற்றும் இந்திய கனிம பகுப்பாராய்ச்சி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது. முதற்கட்ட ஆய்வின் அடிப்படையில் வேலம்பட்டி கிராமத்தில் 1.2 கிலோ மீட்டர் நீளமும், 320 மீட்டர் அகலமும் கொண்ட பகுதியில் மாலிப்டினம் படிம கனிமத் தாது இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

மேலும், வேலம்பட்டி தெற்குப் பகுதியிலும் வெள்ளக்கால் மத்திய பகுதியிலும் மாலிப்டினம் கனிம இருப்பு குறித்து,

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS